செய்தி வெளியீடு எண்:080 நாள்: 10.02.2017

## செய்தி வெளியீடு

01.01.2017–ஐ தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கமுறைத் திருத்தம், 01.09.2016 அன்று வரைவுப் பட்டியல் வெளியீட்டுடன் தொடங்கியது. வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க/நீக்க/திருத்த/இடம் மாற்றம் செய்ய விண்ணப்பங்கள் 01.09.2016–ஆம் தேதியிலிருந்து 30.09.2016–ஆம் தேதிவரை பெறப்பட்டன.

மேற்கண்ட சிறப்பு சுருக்கமுறை திருத்த காலத்தின் போது வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தலுக்காக 15,85,603 விண்ணப்பங்கள் பெறப்பட்டு, 15,26,985 விண்ணப்பங்கள் ஏற்கப்பட்டு 05.01.2017 அன்று வெளியிடப்பட்ட இறுதி வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளனர். மேலும், இடப்பெயர்ச்சி, இறப்பு மற்றும் இரட்டை பதிவு ஆகியவற்றின் காரணமாக 3,84,369 பதிவுகள் நீக்கப்பட்டுள்ளன.

கடந்த 2016–ஆம் ஆண்டு சிறப்பு சுருக்கமுறை திருத்தத்தின் போது மாவட்டங்களிலிருந்து தரவுகள் தொகுக்கப்பட்டு, புகைப்பட வாக்காளர் அடையாள அட்டைகள் அச்சிடுவதற்காக ஒப்பந்ததாரர்களுக்கு இத்துறை வாயிலாக அனுப்பப்பட்டது. கடந்த ஆண்டு, அச்சிடப்பட்ட அட்டைகள் அந்தந்த பகுதி வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் மூலம் வழங்கப்பட்டது.

இந்த ஆண்டு, இப்புதிய வாக்காளர்களுக்கு (15,26,985) தமிழ்நாட்டிலுள்ள அரசு இ–சேவை மையங்கள் மூலம் வாக்காளர் புகைப்பட அடையாள அட்டைகள் வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. விண்ணப்பத்தில் தங்களின் கைப்பேசி எண்ணை அளித்துள்ள புதிய வாக்காளர்களுக்கு ஒரு தனிப்பட்ட அடையாள எண், குறுஞ்செய்தி (SMS) வாயிலாக அனுப்பப்படும். இந்த அடையாள எண்ணை தங்கள் பகுதிக்கு அருகிலுள்ள இ–சேவை மையத்தில் காண்பித்து தங்களது வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையை

இலவசமாக பெற்றுக்கொள்ளலாம். இதற்காக புதிய மென்பொருள் உருவாக்கப்பட்டுள்ளது. தங்களுடைய கைப்பேசி எண்ணை அளிக்காத புதிய வாக்காளர்கள் தேர்தல் துறையின் கட்டணமில்லா உதவி எண்.1950–வை தொடர்பு கொண்டு கைப்பேசி எண்ணை பதிவு செய்ய வேண்டும். அவர்கள், தங்களுடைய ஏதேனும் ஒரு புகைப்பட அடையாளச் சான்றை காண்பித்து அதே இ–சேவை மையங்களில் வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையை இலவசமாக பெற்றுக்கொள்ளலாம்.

**தலைமைத் தேர்தல் அதிகாரி மற்றும்**
**அரசு முதன்மைச் செயலாளர்**

**வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**